செய்தி வெளியீடு எண்.73 நாள்.02.02.2017

**திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 11-ஆம் வகுப்பு பயிலும் 2481 மாணவ-மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை மாண்புமிகு பள்ளிக்கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலன்துறை அமைச்சர் திரு.க.பாண்டியராஜன் அவர்கள் வழங்கினார்.**

~~~~~

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 11-ஆம் வகுப்பு பயிலும் 2481 மாணவ-மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை மாண்புமிகு பள்ளிக்கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலன்துறை அமைச்சர் திரு.க.பாண்டியராஜன் அவர்கள் இன்று (02.02.2017) வழங்கினார்.

ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருநின்றவூர் அரசினர் மேல்நிலைப்பள்ளியில் 156 மாணவ-மாணவிகளுக்கும், ஆவடி அரசு உதவி பெறும் இமாகுலேட் பள்ளி, அயனம்பாக்கம் அரசு பள்ளி, திருவேற்காடு எஸ்.கே.டி.ஜே அரசு உதவி பெறும் பள்ளி, மிட்டணமல்லி அரசு பள்ளி, விஜயந்தா அரசு உதவி பெறும் பள்ளி, காமராஜ் நகர் அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் பள்ளி, தண்டுரை அரசு பள்ளி, ஆர்.சி.எம் அரசு உதவி பெறும் பள்ளி, திருவள்ளூர் சத்தியமூர்த்தி தெரு நகராட்சிப்பள்ளி ஆகிய பள்ளிகளை சேர்ந்த 2481 மாணவ-மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளது. இதில் 1673 மாணவிகளுக்கும் 808 மாணவர்களுக்கும் மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பள்ளிக்கல்வி விளையாட்டு மற்றும் இளைஞர் நலன்துறை அமைச்சர் அவர்கள் கூறியதாவது "தமிழக அரசு மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் என்பதற்காக பல்வேறு திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருகிறது. மாணவர்களுக்கு விலையில்லா சீருடைகள், காலனிகள் முதல் மடிக்கணினி வரை 18க்கும் மேற்பட்ட திட்டங்களை செயல்படுத்திவருகிறது. அவற்றுள் கிராம புறங்களை சேர்ந்த மாணவிகள் மற்றும் மாணவர்கள் கல்வி பயில ஊக்கமளிக்கும் சிறப்பான திட்டம் விலையில்லா மிதி வண்டிகள் வழங்கும் திட்டமாகும். இதுபோன்ற திட்டங்களினால் மாணவர்கள் இடைநிற்றல் போன்றவை தடுப்பதற்காக கொண்டுவரப்பட்ட திட்டங்கள் மாணவர்கள் கல்வி அறிவுமட்டுமின்றி விளையாட்டு, பேச்சு, ஓவியம் போன்றவற்றிலும் பயிற்சி எடுத்துக்கொண்டு சிறந்து விளங்க வேண்டும். மாணவர்கள் அனைவரும் கல்வியுடன் விளையாட்டு போட்டிகளில் கலந்து கொண்டு பல பதக்கங்களை பெற வேண்டும். இவ்வாறு விளையாட்டு போட்டிகளில் கலந்து கொள்ளும் மாணவர்களை ஊக்குவிக்க ஊக்கத்தொகைகள் விளையாட்டு துறையின் மூலம் வழங்கப்படுகிறது. மாணவர்கள் தங்களின் திறமைகளை செயல் முறை விளக்கத்தின் (practical Experiments) மூலம் வெளிப்படுத்த வேண்டும். மாணவர்கள் தேசிய அளவில் நடைபெறும் அறிவியல் கண்காட்சிகளில் கலந்து கொண்டு தங்கள் திறமைகளை வெளிகாட்ட வேண்டும்" என்று கூறினார்.

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு.த.இராஜேந்திரன், திருவள்ளூர் வருவாய் கோட்டாட்சியர் திரு.எஸ்.ஜெயச்சந்திரன், மாவட்ட கல்வி அலுவலர் திருமதி.ஞா.லில்லி புஷ்பராணி (திருவள்ளூர்), ஆவடி வட்டாட்சியர் திரு.பாபு, தலைமையாசிரியர்கள், திருமதி.ஜே.தாணம்மாள் (திருநின்றவூர் அரசு மேல்நிலைப்பள்ளி) சகோ.ரீட்டா மேரி (இமாகுலேட் பள்ளி ஆவடி) மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்**
~~~~~